Dr. K. GANESAN, B.S.M.S.,
Medical Officer
Avizhdam Siddha Hospital and Research Centre.
SECRETARY
The Royal Circle of Siddha Doctors - Coimbatore

"நோயற்ற வாழ்வே, குறைவற்ற செல்வம்" என்ற பழமொழி எவ்வளவு காலம் நீடிக்கும் ? என்ற கேள்வி எழும் அளவிற்கு இவ்வுலகத்தில் பலவிதமான நோய்கள் தோன்றி மனித இனத்தையே அழித்துக் கொண்டிருக்கிறது.

மனிதன் என்று தோன்றினானோ அன்றே நோய்கள் தோன்றிவிட்டன. ஆனால் தற்போது நோய்கள், எண்ணிக்கையில் அதிகமாயும், கொடுமையும் செய்வதாகவும் உள்ளது. இது சிறியவர் முதல் பெரியவர்வரை வாட்டி வதைக்கின்றது. இதற்கு காரணம், நாம் வாழும் இந்நிலத்தில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை மாறுபடும், கொடிய மாசுக்கள் கலந்திருப்பதுமே காரணமாகும். இதைத்தான் நம் முன்னோர்களான சித்தர்கள் "அண்டத்தில் உள்ளதே பிண்டம், பிண்டத்தில் உள்ளதே அண்டம்" என்று கூறினர். அவற்றுள் மிக முக்கியமாக பாதிக்கப்படுவது "பிராண மய கோசம்" என்ற பகுதியாகும்.

இவ்வாறு பிராணமய கோசம் பாதிக்கப்படுவதால் ஏற்படும் கொடிய நோயே "இரைப்பு இருமல்" என்பதாகும்.

நோயின் நிலை

இரைப்பிருமல் என்ற நோயால் சாதாரணமாக மூக்கடைப்பு, தும்மல், மூச்சு வாங்குவதற்கு சிரமம், இருமல் போன்ற அறிகுறிகள் ஏற்படும். அதை நாம் முழுவதும் சரி செய்யாத நிலையில், இந்நோய் தீவிரம் அடைந்து பிராணன் செயல்பாதையையே முற்றிலும் பாதிப்படைய செய்கிறது.

இதற்கு தற்காலிக நிவாரணமாக மருந்துகள் கொள்வதாலும், முற்றிலும் சரி செய்யாத நிலையினாலும் மீண்டும் இதே குறிகுணங்கள் தோன்றி முன் எடுத்துக்கொண்ட மருந்திற்கு கட்டுப்படாமல் அதிகரிக்கிறது. மேலும் இந்நோய் உணவு, செயல், மணம் போன்றவற்றின் ஒவ்வாமையாலும் வருகிறது. அடிக்கடி, தற்காலிக நிவாரணம் எடுத்துக்கொள்வதால் பிற்காலத்தில் மருந்தின் செயல்திறன் குறைந்து, உடல், மனம் இவற்றின் செயல்திறனும் குன்றி "எப்பொழுது தீரும்" என்ற ஏக்கத்தையே நாளடைவில் ஏற்படுத்தி விடுகிறது.

நோய் தோன்ற காரணங்கள்: -

1) பஞ்ச பூதங்களில் மாசுக்களால் ஏற்படும் மாறுபாடுகள்.

2) தனக்கு பிடிக்காத செயல்களாலும், சுவைகளாலும் ஏற்படும் மாறுபாடுகள்.

3. அடிக்கடி ஏற்படும் புறசூழ்நிலை மற்றும் பருவகால மாற்றங்கள்.

4. "காணவே தேவதைக்குப் பிரிந்த பிண்டம்
களவாடித் தின்றாலுங் கணவன் றன்னைத்
தோணவே நிந்தையைச் சொல்வதாலுஞ்
சுசியான பதார்த்த மெச்சில் பண்ணினாலும்
வேணவே ஒருவர் செய்த நன்றி தன்னை
மிக மறந்து கொடுமைகடான் விளம்பு வோர்க்கும்"

பூதி

மேற்கண்ட காரணங்கள் இந் நோய்க்கு மறைமுகமாக உள்ளன.

5. கால ஒழுக்கம், நாள் ஒழுக்கம் இவற்றின் மாறுபாடுகள் .

6. பரம்பரையாகவும்,

7. பறவை, பூனை, நாய் போன்றவற்றின் உரோமங்கள் மற்றும் மகரந்தத்தூள்.

முக்குற்ற அடிப்படையில் இரைப்பிருமல்

இரைப்பிருமல் நோய் தோன்றுவதை முக்குற்றத்தின் அடிப்படையில் பார்க்கப்படும் பொழுது இரண்டு வகையான எண்ணம் தோன்றுகிறது. அது எவ்வாறெனில் இதில் பாதிப்படைவது பிராணவாயு. மேலும் மார்பிடமான அநாகதத்தில் இருந்து எழும் மேல் நோக்குக்காலாகிய உதானன், தன் அளவில் மிகுந்து அதிகமாக மூச்சிரைப்பை ஏற்படுத்துகிறது என்றும்:

இரைப்பிருமல் "கபக் குற்றம்" பாதிப்பதனால் முக்கியமாக மற்ற நான்கு கபங்களை கட்டுப்படுத்தும் அவலம்பகம் பாதிப்படைவதனால் உடலில் அங்கங்கு வாழும் கபங்களும் முற்றிலும் மாறுபாடு அடைகிறது. ஆகவே கபக்குற்றமே என்றும் கூறப்படுகிறது. ஏனெனில் "கபத்தினையன்றி சுவாசகாசங் காணாது" என தேரையர் இந்நோயிற்கு முதல் காரணம் கூறுகிறார்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

எனவே இவ்விரு கருத்துக்களில் உடலில் உருவாகும் 21 கபநோய்களில் முதலில் பாதிக்கப்படுவது கபமே என்பதன் அடிப்படையில் முதலில் பாதிப்படைவது கபக் குற்றமே ஆகும்.

அவ்வாறு கபக்குற்றம் பாதித்து அதன் தன்னிலை மிகுதியால் அருகில் உள்ள பித்தத்தை பாதிப்படையச் செய்கிறது. இவ்வாறு பாதிப்படைந்த பித்தம், உடலில் அனலை உண்டாக்கி சூடு அதிகமாகி குருதி கொதிப்படைந்து, தலைக்கு ஏறி, குளிர்ந்து தலையில் தங்கி தலைபாரம், தும்மல், மூக்கில் நீர் வடிதல், தொண்டை கரகரப்பு போன்ற குறி குணங்களை ஏற்படுத்துகிறது. பின்பு இருமலையும் உருவாக்குகிறது.

ஆகவே கபம் வரும் இடங்களில் நெஞ்சு முக்கியமானதாகக் கூறப்பட்டுள்ளதால் அந்த இடத்தில் கபம் அதிகரித்து வாதத்தின் இயக்கத்தை பாதிப்படையச் செய்வதன் மூலம் பிராணவாயு பாதிப்பு அடைந்து உதானவாயு சீர்கெட்டு அதிகப்பட்டு இயங்குகிறது.

இவ்வாறு பிராணமய கோசம் பாதிப்பதைத் தொடர்ந்து மனோ மயகோசம், அன்னமய கோசம் பாதிப்பு அடைகிறது. இந்நோய் நாள்பட்ட நிலையில், மற்ற ஒவ்வாமையுடன் தொடர்புடைய தோல் நோய்கள் ஏற்படுகிறது.

நாடி நடை

"கபத்தினையன்றி சுவாசகாசங் காணாது"
(தேரையர்)

"உற்றிடு மய்ய நாடி யோங்கியே துடித்து நிற்றாத்
பற்றிடும் இரும வீளை பதறியே யிளைப்பு
உண்டாக்கி" (குணவாகடம்)

"பண்பான பித்தத்தில் சேத்து மங்கூடிப் பரிசித்தால்"
(சதகநாடி)

"பாங்கான வாதத்தில் சேத்தும நாடி பரிசித்தால்"
(சதகநாடி)

இரைப்பிருமலில் ஒவ்வாமை

இரைப்பிருமல், ஒவ்வாமை காரணியால் ஏற்படுகிறது என்று கூறப்படுவது உண்மையாகும். எவ்வாறென்றால் ஒவ்வொருவரது உடலும் சற்று மாறுபட்டு காணப்படுகிறது. ஆகையால் ஒருவருக்கு ஒத்துக்கொள்ளும் உணவு, மற்றவருக்கும் ஒத்துக்கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆகையால் உடல் தனக்கு ஒவ்வாத எதையுமே வெளிப்படுத்துகிறது. இது "பிரதிபலித்தல்" என்ற செயல்மூலம் உடலில் நடைபெறுகிறது. ஆகவே இந்த நோயில் ஒவ்வாமை ஏற்பட்டவுடன் கபம், தும்மலாகவும், சளியாகவும் வெளிப்படுகிறது.

மூச்சை சரிவர எடுக்க முடியாமல் துன்பத்தை ஏற்படுத்தும் அனைத்துமே இரைப்பிருமல் அல்ல. இதய சம்பந்தமான அல்லது நீர் சம்பந்தப்பட்ட நோய்களில் ஆதிக்கம் காரணமாக மூச்சிரைப்பு ஏற்பட சாத்தியம் உள்ளது. இதற்கு அந்த நோயின் தீவிரத்தைக் குறைத்தால் இரைப்பு நோய் நீங்கிவிடும்.

இரைப்பிருமலில் மருந்தின் பங்கு:

இந்நோயில் மூன்று குற்றங்களும் பாதிக்கப்படுகிறது. ஆனால் அதிக அளவில் "கபம்" பாதிக்கப்படுகிறது. ஆகவே தேவையற்ற அளவு தங்கி, நிற்கும் கபத்தினை வெளியேற்ற மருந்துகள் வழங்கி, பின் அந்நோயிற்கான மூல காரணத்தை அறிந்து அவற்றை நீக்கினால், முற்றிலுமாக சரிசெய்து பூரண சுகத்தை அளிக்கமுடியும்.

சிகிச்சை வழிமுறைகள்

1. முதிலில் ஏற்படும் குறி குணங்களை குறைத்துக் கொள்ள மருந்துகள் வழங்குதல்
2. கபக் குற்றம் தன்னிலை அடைய மருந்து கொடுப்பதன் மூலம் மற்ற குற்றங்கள் தன் சுய நிலைக்குத் திரும்பும்.
3. நோயிற்கான காரணியை கண்டறிந்து அதை வெளியேற்றவோ, தடுக்கவோ முயற்சி மேற்கொள்ளுதல்.
4. உடலில் எதிர்ப்புச் சக்தியான உடல் இயங்கியில் சக்தியை அதிகரிக்கவும், ஆன்ம சக்தியை நிலை நிறுத்தவும் மருந்து வழங்க வேண்டும்.

கூட்டுச் சிகிச்சை முறை:

1. அக, புற மருந்துகள் மூலம் குறி குணங்களை நீக்கி சிகிச்சை அளித்தல் வேண்டும்.

2. காற்றின் மாசுபாடு, மனம், செயல் இவற்றால் உண்டானால் அவற்றினை அறிந்து நீக்கிவிடுதல்.

3. உணவு, ஒழுக்கம், மனம் இவற்றால் ஏற்படும் மாறுபாடுகளை நீக்கி சீர்படுத்துதல்.

4. சரியான, எளிமையான உடற்பயிற்சி, எளிய மூச்சுப்பயிற்சி, யோகாசனப்பயிற்சி முறைகள் ஆகியவற்றை அளிக்க வேண்டும்.

முடிவு

எந்த ஒரு நோயும் முக்குற்றங்களில் மாறுபாடுகள் மூலம் ஏற்படுவதால் அவற்றை சூழ்நிலைக்கு ஏற்ப உணவு, உடை, செயல்முறைகள் இவற்றை மாற்றி அமைத்துக் கொள்வதின் மூலமாகவும், நோயிற்கான காரணிகளைக் கண்டறிந்து அவற்றை நீக்குவதன் மூலமாகவும், காலவரைக்குற்பட்டு தொடர்ந்து மருந்துகளை எடுத்துக் கொள்வதாலும், பத்திய முறைகளை முறையாகக் கடைபிடித்து வந்தால் இரைப்பு இருமல் என்ற நோயை, மாற்று மருத்துவத்தால் தீர்க்க முடியாத நோயாகிய இரைப்பிருமலை, நிச்சயம் தீர்க்க முடியும என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

சிறப்பு மருந்து

கரிசாலை மடக்கு தைலம்

நேரம்: காலை - மாலை

அளவு: இரண்டு துளிகள்

அனுபானம்: தேன் அல்லது பால்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

உயிர் காக்கும் சித்த மருத்துவம்

டாக்டர். த. மோகனராஜ், தலைவர்,
அகில திருவிதாங்கூர் சித்த வைத்திய சங்கம்,
ஆனந்தாசிரமம், முன்சிறை,
புதுக்கடை அஞ்சல் 629 171. குமரி மாவட்டம்.

ஆயக்கலைகள் அறுபத்து நான்கையும் தோற்றுவித்து வளர்த்த நாடு நம் பாரத நாடு. அக்கலைகளுள் ஒன்று சித்த மருத்துவ கலை. மேனாட்டு மருத்துவ முறை நம் பாரதத்தில் நுழைவதற்கும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சித்த மருத்துவக்கலை நம் நாட்டில் மிகவும் பொலிவோடும் புகழோடும் விளங்கியது என்பது உண்மை. இக்கருத்தினை வரலாற்று ஆராய்சியாளர்களும், அகழ்வாராய்ச்சி வல்லுநர்களும் தெளிவு படுத்துகின்றனர். மேலும் இயற்கையின் சீற்றத்தால் பல்வேறு அழிவுகளுக்குப் பின்னரும் எஞ்சியுள்ள பல சித்த மருத்துவ நூல்களும் இவ்வுண்மையை உறுதிப்படுத்துகிறது. சித்த மருத்துவ நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தத்துவங்கள் உடல் கூறு, மூலிகை மருந்துகள், மருந்துகள் செய்யும் முறை, நோய் குணம், கூறுபாடுகள், அறுவை மருத்துவம் பற்றிய குறிப்புகள் முதலியவைகளை ஆராயும் போது உண்மையிலே இது ஒரு அற்புத கலை என்பது புலனாகும்.

சித்தர்கள்

இம்மருத்துவக் கலையை நமக்கு தந்தவர்கள் சித்தர்கள் ஆவர். சித்தர்கள் என்று குறிப்பிடும் போது அஷ்டமா சித்திகளைப் பெற்றவர்கள். உலகில் உள்ள எல்லா பொருட்களின் தன்மைகளை அறிந்தவர்கள். உருவ, அருவ சித்தி பெற்றவர்கள். தங்களது விருப்பம் போல் தங்களை மாற்றிடும் சக்தி பெற்றவர்கள். மணி, மந்திரம் மருந்து இவைகளின் துணை கொண்டு மக்களின் நோய்களைத் தீர்த்தும் இறவா நிலையையும் பெற்றவர்கள். வாதம், வைத்தியம். யோகம், ஞானம் என எல்லா கலைகளையும் அறிந்தவர்களும் ஆவர். சித்தர்கள் பலர் இருந்திருந்தாலும் அவர்களுள் முதன்மையானவர்கள் பதினெட்டு பேர் ஆவர். அவர்கள் முறையே (1) நந்தி (2) அகத்தியர் (3) திருமூலர் (4) புண்ணாக்கீசர் (5) புலத்தியர் (6) பூனைக் கண்ணனார் (7) இடைக்காடர் (8) போகர் (9) புலிக்கையீசர் (10) கருவூரார் (11) கொங்கணவர் (12) காலாங்கி (13) அழுகண்ணர் (14) அகப்பையர் (15) பாம் பாட்டி (16) தேரையர் (17) குதம்பை (18) சட்டை நாதர் இப்பதினெண்வரில் முக்கியமானவர் அகத்தியர்.

தோற்றம்

சித்த மருத்துவத்தின் தோற்றம் குமரியும் அதை தொடர்ந்து கடல் கொண்ட லெமுரியா கண்டமுமாகும் என்று வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். அவர்களது கூற்றினை மெய்ப்பிக்கும் வகையில் இன்று பல சான்றுகளும் உள்ளன. "தட்சிணாமூர்த்தி காவியம்" என்னும் நூல் அகத்தியர், வேளி மலையில் நரம்பு மருத்துவம், வர்ம மருத்துவம், அடிமுறை (சிலம்பம்) முதலியவைகளைக் கற்றறிந்ததாகக் கூறுகிறது. சித்த மருத்துவ நூல்கள் பலவற்றிலும் நம் மாவட்டத்தில் பேச்சு வழக்கில் உள்ள பல சொற்கள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. சித்த மருத்துவத்தின் பகுதியான வர்மக் கலை, அடிமுறை, சிலம்ப விளையாட்டு போன்றவை இன்றும் நம் மாவட்டத்தின் தனிச்சிறப்பு வாய்ந்ததாக காணப்படுகிறது. மேலும் இன்று அரசால் பதிப்பிக்கப்படாத பல்வேறு சித்த மருத்துவ நூல்கள் இன்று நம் மாவட்டத்தில் ஆசான்கள் என்று அழைக்கப்படும் சித்த மருத்துவ சிரோமணிகளிடம் மட்டும் தான் உள்ளது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

<u>நோய்கள்</u>

மனிதன் வாழுகின்ற வெவ்வேறு விதமான சூழ்நிலைகள், வசதிகள், உழைப்பு இவைகளின் காரணத்தால் உடலில் மாற்றம் ஏற்பட்டு, வாத, பித்த, கப குற்றங்களான நோய் உருவாகிறது. இவ்வாறு உருவாகும் நோய்கள் 4448 என சித்தர்கள் குறிப்பிட்டுள்ளார். வாதம் 80, பித்தம் 40. சேத்துமம் 96, உதர நோய் 108, சயம் 12, நேத்திர நோய் 96, கர்ணிகம் 96, சிர நோய்கள் 1008, சிலந்தி 68, சன்னி 13, சுரம் 64, பிளவை 52, படுவன் 11, குட்டம் 18, மூலம் 18, உள்மேகம் 21, புற மேகம் 21, நீரிழிவு மேகம் 21, கிரந்தி 48, குழந்தைகள் நோய் 1008 போன்றவை இவற்றுள் குறிப்பிடத் தக்கவையாகும்.

<u>மருத்துவம்</u>

பொதுவாக சித்த மருத்துவத்திற்கு மூலிகைகளையே பயன்படுத்துகின்றனர் என்பது மக்களின் கருத்து. ஆயினும் கொடிய நோய்களுக்கு தாதுப் பொருட்களையும் பல்வேறு மருந்துகளாகப் பயன்படுத்தி சித்தர்கள் குணமடையச் செய்துள்ளனர். பற்பங்கள், செந்தூரங்கள், கட்டு, களங்கு, முப்பு போன்ற உயிர்காக்கும் மருந்துகள் தாது பொருட்களைப் பயன்படுத்தியே செய்யப்படுகிறது. நரை, திரை, மூப்பு, பிணி, இவற்றை வரவிடாமல் தடுக்கும் கல்ப மருந்துகள், சாவை வெல்லும் பல்வேறு வழிகள், இரசவாதக்கலை போன்றவையும் சீரிய முறையில் கூறப்பட்டுள்ளது சித்த மருத்துவ நூல்களிலேயாகும். இன்றைய மருத்துவ உலகிற்கு சிம்ம சொப்பனங்களாக விளங்கும் எய்ட்ஸ், மூட்டு வாதம், படர் தாமரை, நீரிழிவு, ஆஸ்த்துமா போன்ற நோய்களுக்குரிய மருத்துவ முறைகளும் பண்டைய சித்தர்களால் அவர்தம் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளவையே ஆகும். தாயின் கருவில் இருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதையும் சித்த மருத்துவ முறைப்படி கணித்துக் கூற முடியும். சித்த மருத்துவ நூல்களில் கூறப்பட்டுள்ள நாடி நிலைகளை சரியாக அறிந்திருக்கும் ஒரு மருத்துவரால் ஒரு நோயாளிக்கு வந்திருப்பது தீரும் நோயா, தீரா நோயா என்பதை சரியாகக் கூற முடியும். மேலும் நாடி நிலையை வைத்து ஒருவரது மரண நாழிகை நெருங்கி விட்டதா இல்லையா என்பதை திட்ட வட்டமாகக் கூற முடியும்.

<u>அன்றும் இன்றும்</u>

இன்று சித்த மருத்துவம் மக்களிடையே நலிவடைந்து வருகிறது. ஆனால் அன்று வாழ்ந்த மக்கள் தங்கள் வீடுகளில் உபயோகிக்கும் மளிகை சாமான்கள், வீட்டுச் சுற்றுப்புறங்களில் உள்ள மூலிகைகள் ஆகியவற்றைக் கொண்டு சிறு சிறு நோய்களை தாங்களே தீர்த்துக் கொண்டனர். நோய்கள் வராமலும் வந்த நோய்கள் பரவாமலும் தடுக்கும் வழிகளையும் அறிந்திருந்தனர். அன்றைய அரச குடும்பங்களிலும் கூட சித்த வைத்தியம் தான் செய்யப்பட்டது என்பது அனைவரும் அறிந்த உண்மை. இன்றோ நாகரீக உலகின் வேகத்தினால் உடனடி விளைவு தரும் ஆங்கில மருத்துவம் நாளுக்கு நாள் மக்கள் உள்ளத்தை கவர்ந்து வருகிறது. சித்த மருத்துவத்தை குறித்த தரக்குறைவான ஓர் எண்ணம் இன்றைய மக்களிடம் பரவலாக இருந்து வருகிறது. ஆனால் சித்த மருத்துவ மருந்துகளை ஆராய்ந்தால், விஞ்ஞானம், முன்னேறாத அந்நாட்களில் இத்தனை அற்புதமான மருந்துகளை சித்தர்கள் எவ்வாறு கண்டு பிடித்தனர்! அவர்களுக்கு அதற்குரிய அறிவோ, கருவிகளோ இல்லையே என எண்ணத் தோன்றும். எடுத்துக்காட்டாக வாயுவைக் கட்டுப்படுத்தும் குணமுள்ள மருந்துகளை வாத நோயாளிக்கும், குளிர்ச்சியூட்டும் குணமுள்ள மருந்துகளை பித்த நோயாளிக்கும் கொடுக்கிறோம். அன்றைய சித்தர்கள் அறிவிலிகளாக இருந்திருந்தால் வாத நோய்க்கு மூலகாரணம் வாயு என்பதையும், எந்தெந்த மருந்துகள் வாயுவை கட்டுபடுத்தும் என்றும் பித்த நோய்க்கு மூலகாரணம் உடல்சூடு என்றும், எந்தெந்த மூலிகை மருந்துகள் அச்சூட்டினை தணிக்கும் என்றும், எவ்வாறு அறிந்தார்கள்? நிச்சயமாகவே அவர்கள் அறிவு ஜீவிகளாக இருந்தனர் என்பது தான் உண்மை. கபம் அழிவிற்கு காரணமானது என்பது இன்றைய

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

விஞ்ஞானம் கூறும் உண்மை. ஆனால் இத்தகைய உண்மைகள் அன்றே சித்த மருத்துவ நூல்களில் தெள்ளத் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

உணவே மருந்து

சித்த மருத்துவ முறைப்படி மருந்து என்று கூறியிருப்பது ஏதோ வித்தியாசமான ஒன்றல்ல. அது நமது அன்றாட வாழ்வோடும், சமுதாய சடங்குகளோடும் அன்றாடம் நாம் உண்ணும் உணவோடும் கலந்துள்ள ஒன்றேயாகும். ஆகவே நமது மருத்துவ முறை ஒவ்வொரு மனிதனின் வீட்டின் சமையல் கட்டிலிருந்து துவங்குகிறது. எனவே உணவே மருந்து மருந்தே உணவு என்று கூறும் பழைய சொல் உண்மையாகிறது. இதனாலேயே நமது சித்த மருத்துவ முறைகள் பத்தியத்திற்கு அதிக மதிப்பை கொடுத்து வருகின்றது. நம் வீடுகளில் சமையல் செய்யும்போது வெவ்வேறு பதார்த்தங்களுக்கு சில மளிகை சாமான்களை சேர்ப்பது கட்டாயமாகக் கருதப்படுகிறது. எடுத்துக்காட்டாக பருப்பிற்கு காயம், பூடு, வாளை போன்ற மீன் வகைகளுக்கு பூண்டு, இறைச்சிகளின் கவிச்சியைப் போக்க பெருஞ்சீரகம், நிலக் கடலைக்கு சர்க்கரை அல்லது கருப்புக்கட்டி, கருணைக் கிழங்கிற்கு அதிக புளி போன்றவை. இதனை விஞ்ஞான அடிப்படையில் ஆராய்ந்து பார்ப்போமாயின் உணவு பொருட்களின் சில நச்சுத் தன்மையை நீக்கவே இவை உபயோகிக்கிப் படுகின்றன என்பது புலனாகும். பண்டைக் காலம் முதல் வழக்கமாக செய்து வரும் நம் சமையல் முறைகளில் இத்தகைய உத்திகள் புகுந்தது எவ்வாறு என வினவுவோமாயின் நம் சித்த மருத்துவம் பட்டி தொட்டிகளிலெல்லாம் அந்த அளவிற்கு பரவலாக கையாளப்பட்டிருந்தது என்பது தெளிவாகும்.

இத்தகைய மருத்துவக் கலையை நலியவிடாமல் காத்து அதன் மேன்மையையும் பயன்களையும் உலகறியச் செய்ய வேண்டும் என்ற நோக்குடன் உருவாக்கப் பட்டது தான் முன்சிறை அகில திருவிதாங்கூர் சித்த வைத்திய சங்கம். இச்சங்கமானது 1937 - ம் ஆண்டு கம்பெனி சட்டப்படி பதிவு செய்யப்பட்டு சித்த மருத்துவக் கல்லூரி, மருத்துவமனை, பார்மஸி, மூலிகைத்தோட்டம், போன்ற நிறுவனங்களை நடத்தி வருகிறது. சங்கம் சார்பில் இயங்கி வரும் மருத்துவமனையில் கொடிய நோய்கள் என கூறப்படும் எய்ட்ஸ், ஆஸ்மா, மூக்குப்புற்று, படர்தாமரை (சோரியஸிஸ்) மூட்டுவாதம், நீரிழிவு, புற்றுநோய் போன்ற நோய்களுக்கும் எளிய பத்தியங்களுடன் மருத்துவம் செய்து வருகிறோம். மருந்துகளைச் சாப்பிடக் கொடுத்தும், உடலில் பூசியும், எண்ணெய் தடவல் செய்தும், பிழிச்சல், ஆவி பிடித்தல் போன்ற முறைகளிலும் நோய்களைக் குணப்படுத்தி வருகிறோம். எமது மருத்துவமனையில் பரம்பரை மருத்துவர்களைக் கொண்டும், பட்டதாரி மருத்துவர்களைக் கொண்டும் மிகச் சிறந்த முறையில் குறைந்த செலவுடன் சிகிட்சை நடைபெற்று வருகிறது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

மூத்திர நோய்களும் சித்த மருத்துவ சிகிச்சை முறைகளும்

மருத்துவ மாமணி
எம்.ஏ.ஹுஸைன்
நிறுவுனர்
இந்திய தொண்மை சித்த மருத்துவ ஆய்வு மையம்
இயக்குநர்- இம்ப்காப்ஸ்
2, அண்ணா நகர்,
பழைய பெருங்களத்தூர்,
சென்னை- 600 063, தொலைபேசி 2376988

சிறுநீர்ப் பிரித்தியின் வேலையும், மூத்திர நோய்களும் *(KIDNEYS, THEIR FUNCTION AND DISEASES)*

சிறுநீர்ப் பிரித்தி (KIDNEYS) என்பது முதுகுத்தண்டின் (SPINAL-CORD) இருபுறங்களிலும் இருக்கும் அவயங்கள். 4 அங்குல நீளமும், 2 அங்குல அகலமும், 1 அங்குல பருமனும் உள்ளன. உயிர் அணுக்களை ஆக்கலும் அழித்தலும் உடலில் எப்பொழுதும் நடந்து கொண்டிருப்பதால் உயிர்நிலைப் பெற்றிருக்கிறது. ஆக்கல் வேலைக்கு மூலப்பொருள் இரத்தமும் அதன் சத்துக்களும், அழிந்து போகும் இழையங்களும் இரத்தத்தோடு சுற்றி வருகின்றன. நுரையீரல் மூலமாக கரியமில வாயுவையும் (CARBON-DI-OXIDE) தோலின் மூலமாக வேர்வையையும், சிறுநீர்ப்பிரித்தியின் மூலமாக அழிக்கப்பட்ட இழையங்களிலுள்ள பிசிதம் முதலியவற்றையும் இது வெளிப்படுத்துகிறது.

சிறுநீர்ப் பிரித்தியின் உட்புறம் குழிந்தும், வெளிப்புறம் குவிந்தும் இருக்கும். குழியாக இருக்கும் உட்புறத்தில் இரத்தப் பாய் குழல் மூலம் இரத்தம் உட்சென்று, வடிகுழாய் மூலம் வெளியாகிறது. அவ்விடத்திலிருந்தே சிறுநீர்க் குழாயும் வெளிவருகிறது.

சற்று வெண்ணிறமாகப் பதினைந்து அங்குலம் கீழே நீண்டு, மூத்திரப் பையில் சிறுநீர் வடிகுழாய் வந்து சேருகிறது. மூத்திரப் பை அடி வயிற்றின் மத்தியிலிருக்கிறது. இரு புறத்திலும் மூத்திரக் குழாய்களினின்று வடியும் மூத்திரத்தைச் சேகரித்து வைத்துக்கொண்டு பை நிரம்பியவுடன் மூத்திரப்புற வழியாக (URETHRA) வெளிவருகிறது.

சுமார் 20 அவுன்ஸ் வரையில் மூத்திரம் இந்தப் பையில் தங்கக் கூடும். மூத்திரப்புற வழி புறப்படும் இடத்தில் ஒரு சுருங்கு தசை இருக்கிறது. மூத்திரப் பை நிரம்பியவுடன் சுருங்கு தசை தளர்ந்து மூத்திரம் வெளிவருகிறது.

மூத்திரம்

நாளொன்றுக்கு ஒரு மனிதன் சராசரி 3/4 படி மூத்திரம் கழிக்கிறான். பெண்களுக்கு சற்று குறையும். வேர்வை அதிகமான கோடைக்காலத்தில் மூத்திரம் குறைவுபடும். குளிர்ந்த வேர்வை இல்லாத காலத்தில் மூத்திரம் அதிகம் போகும். காய்ச்சல், சிறுநீர்ப் பிரித்தியின் அழற்சி முதலிய வியாதிகளில் மூத்திரம் குறைந்துவிடும். மூத்திரம் வெண்ணிறமான மஞ்சளாகவோ, புதிதாக அறுக்கப்பட்ட வைக்கோல் நிறமாகவோ இருக்கும்.

சில சமயங்களில், வியாதி இல்லாத காலத்தில் கூட மூத்திரம் சற்றுக் கலங்கலாகவும், சளி கலந்துமிருக்கும். சிறுநீர்ப் பிரித்தியும் மூத்திரப் பையும் நோயுற்றால் அப்போது மூத்திரத்தில் சளி அதிகமாகக் காணப்படும். இரத்தம் நீரில் கலந்திருந்தால் புகை அடர்ந்ததுபோலக் காணப்படும். மூத்திரத்தை அதிக நேரம் ஒரு பாத்திரத்தில் வைத்திருந்தால் அடிப்பாகம் கலங்கியிருக்கும், மேற்பாகம் தெளிந்திருக்கும். துர்நாற்றம் உண்டாகும். மூத்திரத்தில் ஒப்புச் செறிவு (SPECIFIC GRAVITY) 1015 முதல் 1025 வரை இருக்கும். தண்ணீர் அதிகம் இருப்பின் ஒப்புச் செறிவு குறையும். தண்ணீர் குறைந்தால் ஒப்புச் செறிவு அதிகமாகும். மூத்திரம் சற்று புளிப்புள்ளது. அதிக நேரம் வைத்திருந்தால் காரமாக மாறிவிடும்.

மூத்திரக் கோளாறுகள்

1 மூத்திரம் இல்லாமை

சிறுநீர்ப் பிரித்தியின் தீவிர அழற்சி, அமிலங்கள், இரசாயனங்கள் போன்ற வஸ்துக்களால் அழற்சி, மூத்திர வடிகுழாய் இரண்டிலும் கற்களால் அடைப்பு, அதிர்ச்சி இவைகளாலும் அறுவை சிகிச்சை செய்த பிறகும் இது ஏற்படும்.

2 இரத்தம் கலந்த மூத்திரம்

சிறுநீர்ப் பிரித்தியின் அழற்சி, அமிலங்களால் உண்டாகும் அழற்சி, உருக்கிநோய், மூத்திரப் பையில்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

பூச்சிகள், மூத்திரக் கற்கள், அடிகாயங்கள் (மூத்திரக் கால வர்மம்) கட்டிப்புற்று இவைகளால் இது காணப்படலாம்.

3 மூத்திரத்தில் பித்தம்

காமாலை உண்டு பண்ணும் நோய்களில் காணப்படும்.

4 மூத்திரத்தில் வெண்கரு

சிறுநீர்ப் பிரித்தி நோய்கள், உருக்கி நோய், காய்ச்சல் முதலான இதர நோயகள், பாடாணம் உட்கொள்ளுவது, காக்கை வலிப்பு, இரத்தக் குழாய் உடைப்பு போன்ற நோய்களில் காணலாம்.

5 மூத்திரத்தில் சீழ்

சிறுநீர்ப் பிரித்தியில் உருக்கி நோய், சிறுநீர்ப் பிரித்தியில் சீழ் பிடிப்பது, மூத்திரப் பையில் சீழ் பிடிப்பது, வெட்டை போன்ற நோய்களில் காணலாம்.

6 பால் போன்ற மூத்திரம்

ஆனைக்கால் நோய் தரும் பூச்சியால் ஏற்படுகிறது.

மூத்திரம் உண்டாகாமை(URAEMIA)

சிறுநீர்ப் பிரித்திகள் எக்காரணத்தினாலாவது அழற்சி கொண்டு, அவற்றின் வேலைகளை செய்யாமல் தளர்ந்துவிட்டால், சாதாரணமாக, உடலுக்குத் தேவையில்லாதவையும், உடலுக்குக் கெடுதல் உண்டுபண்ணக்கூடியவையுமான அமிலங்கள், இரசாயனங்கள் மூத்திரத்தின் மூலம் வெளியே செல்லாமல், இரத்தத்தோடு கலந்து உடலில் தங்கிவிடுமானால் அவை மனிதனின் மூளையைத் தாக்கும். மூளைக்கோளாறுகள், மூளையின் ஒரு பாகத்தில் வீக்கம், இரத்தத்தில் சுதயக் குறைவு, இரத்தத்தில் புளிக் காடி அதிகம் மற்றும் சில பாடான நுண்ணங்களினாலும் இந்நிலை ஏற்படும்.

குறி குணங்கள்

தலைவலி, மயக்கம், பிதற்றல், வலிப்பு, ஜுரம், மூச்சுத்திணறல், மூச்சிறைப்பு, பெருமூச்சு, சிறுமூச்சு, வாந்தி, நினைவிழத்தல் போன்றவை ஏற்பட்டு முடிவில் மரணம் ஏற்படும்.

சிகிச்சை

உப்பு நீரால் பேதிக்குக் கொடுத்து மலபிளக்குதல், அல்லது எனிமா உப்பு நீரால் கொடுப்பது, நெரிஞ்சில் மூலம் 100 கிராம், முற்கீரை மூலம் 100 கிராம், பார்லி 100 கிராம் இவைகளை சம எடை எடுத்து துகல்களாக்கி 1600 மி.லி. தண்ணீரில் வேகவைத்து 200 மி.லி. ராக வற்ற வைத்து ஆறிய பின் காலை 100 மி.லி., மாலை 100 மி.லி., என இது போல் நாட்கள் செய்து வர மூத்திரம் உண்டாவதோடு தாராளமாக வெளியேறும்.

2 இரத்தம் கலந்த மூத்திரம்

காரணங்கள்

1. சிறுநீர்ப் பிரித்தி, மூத்திரப் பை அல்லது மூத்திரப் புறவழி இவைகளில் ஏற்படும் காயங்களினால் இரத்தம் இந்த அவயங்களிலிருந்து வந்து மூத்திரத்தோடு கலந்திருக்கும்.

2. மேற்கூறிய இடங்களில் கற்கள் உண்டாகி, புண்ணாகி, அதனின்றும் இரத்தம் வெளிப்படலாம்.

3. மேற்கூறிய அவயங்களின் அழற்சி, சதைக்கட்டி (TUMOURS) இந்த அவயங்களிலும், மூத்திரக்காயிலும் (PROSTATE) உண்டாதல்.

4. மேலே கூறிய அவயங்களில் காச நோய்கள்.

5. கடுமையான மலேரியாக் காய்ச்சல் பெரியம்மைக் காய்ச்சல் இவைகளால் இரத்தக் கலப்பு ஏற்படலாம்.

சிகிச்சை

கற்களினால் இரத்தம் வருமானால் குளிர்ந்த தண்ணீரில் எலுமிச்சம் பழம் இரசம் கலந்து குடிப்பதற்குக் கொடுக்க வேண்டும். வலி அதிகம் இருந்தால் சுத்தித்த அபின் நேரிடையாக ஒரு குன்றியளவு தர வேண்டும். எனிமா கொடுத்து மலத்தை வெளியேற்ற வேண்டும். 400 மி.லி. தண்ணீரில் ஆப்பச் சோடா ஒரு மேசைக் கரண்டி அளவு கலந்து 2 மணி நேரத்திற்கு ஒரு முறை கொடுக்க வேண்டும். மூக்கொரட்டை வேர் 1 பலம் (35 கிராம்) துகள்களாக்கி 800 மி.லி. தண்ணீரில் வேகவைத்து 200 மி.லி. குடிநீராக வற்ற வைத்து காலை 100 மி.லி., மாலை 100 மி.லி., குடிப்பிக்க வேண்டும். சிலாசத்துபற்பம் 2 1/2கிராம், வெடியுப்பு சுண்ணம் ஒரு அரிசி எடை, சீனாக்கார பற்பம் 1 அரிசி எடை வெந்நீருடன் தினம் 3 வேளைக்கு, வழங்க வேண்டும். இவ்வாறு 3 தினங்கள் செய்து வர மூத்திரத்தில் வரும் இரத்தம் நிற்கும்.

3. மூத்திரத்தில் பித்தம்

இதனால் மஞ்சள் காமாலை, நடுக்கம், வாந்தி, ஜுரம், வயிற்று வலி, நீர் எரிச்சல் இவைகள் உண்டாகும்.

சிகிச்சை

அன்னபேதி செந்தூரம் (பழச்சாற்றில் தயாரித்தது) 4 அரிசி எடை தேனுடன் காலை

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

மாலை கொடுக்கலாம். சிலாசத்துபற்பம் 4 அரிசி எடை இளநீருடன் காலை மாலை கொடுக்கலாம். இவ்வாறு 10 தினங்களுக்கு கொடுக்க மேற்கண்ட நோய் நீங்கும். முற்றிய மஞ்சள் காமாலையானால் கீழ்காய் நெல்லி இலை அரைத்து இரண்டு சுழற்சிக்காய் அளவு எடுத்து தயிரில் கலந்து காலையில் வெறும் வயிற்றில் கொடுக்க வேண்டும். இப்படி 3 நாட்கள் கொடுத்து வருவதுடன் அன்னபேதி செந்தூரம் 30 நாட்களுக்கு காலை மாலை தேனுடன் கொடுக்க வேண்டும். உப்பில்லா பத்தியம் வைக்கவேண்டும்.

4. மூத்திரத்தில் வெண்கரு (ALBUMINURIA)

சாதாரண காலங்களில் மூத்திரத்தில் வெண்கரு காணப்படமாட்டாது. சில நோய்களில் வெண்கரு (ALBUMIN) வெளியாகும். அப்போது அதற்கு வெண்கரு இறக்கம் என்று பெயர். வெண்கரு மூத்திரத்திலிருப்பதை கண்டுபிடிப்பது மிகவும் சுலபம். களங்கமற்ற சுத்த மூத்திரத்தை ஒர் ஆய்வுக் குழாயில் (TEST TUBE) கால் பாகம் ஊற்றி எரிமதுசார விளக்கில் (SPIRIT LAMP) இந்த நீரின் மேல்பாகத்தைக் காய்ச்ச வேண்டும். கொதிக்கும் பாகம் சுத்தமாக யாதொரு மாறுதலும் இல்லாமல் இருக்குமானால் அதில் வெண்கரு கலக்கவில்லை. அப்படியில்லாமல் கொதித்த பாகம் கலங்கி வெண்ணிறமாகக் காணப்பட்டால் அதில் ஒரு சொட்டு புளி காடியை (ACETIC ACID) சேர்க்கவேண்டும். சேர்த்த பிறகும் கலக்கம் அப்படியே இருந்தால் அந்த நீரில் வெண்கரு இருக்கிறது என்று முடிவு செய்யலாம்.

காரணம்

சாதாரணமாக உணவில் மாறுபாடுகள் உண்டானாலும், வெண்கரு மூத்திரத்தில் வெளியாகலாம், உணவில் புரதம் அதிகதமானாலும், சிறுநீர்ப் பிரித்தியில் அழற்சி உண்டானாலும், காச நோய் இருந்தாலும் புற்று நோய் இருந்தாலும், நரம்புகள் தளர்ச்சியினாலும் இந்நோய் உண்டாகலாம்.

நவீன முறைப்படி ஆய்வு செய்து உண்மையான காரணம் அறிந்து அதற்கேற்ப சிகிச்சை அளிக்க வேண்டும் எனவே சிகிச்சையை இக்கட்டுரையில் வழங்க இயலாது.

5. மூத்திரத்தில் சீழ் (PUS IN THE URINE)

காரணங்கள்

1. சிறுநீர்ப் பிரித்தியின் கற்களால் புண் உண்டாகி அதனால் சீழ்ப்பிடித்துச் சிறுநீரில் கலந்து வரலாம்.

2. சிறுநீர்ப் பிரித்தியில் காசநோய் (TUBERCLE OF THE KIDNEY) உண்டாவதால் ஏற்படலாம்.

3. வெள்ளை, வெட்டை முதலிய நோய்கள் மூத்திரம் புறவழியிலிருந்து மேலேரி மூத்திர அவயங்களில் பரவுவதனாலும் உண்டாகலாம்.

4. மூத்திரப் பையில் அழற்சி ஏற்ப்பட்டு அதில் சீழ் பிடித்தாலும் உண்டாகலாம்.

5. மூத்திரப் பையில் கற்களால் புண் உண்டாகி அதனால் சீழ்ப்பிடித்துச் சிறுநீரில் சீழ் கலந்து வரலாம்.

சிகிச்சை

வெள்ளை, வெட்டை காரணமானால் வெண் குங்கிலிய பற்பம் 2 1/2 கிராம், பசு வெண்ணை அல்லது சுடவைத்த பசுவின் பால் இவற்றுடன் கலந்து தினம் இரு வேளை வீதம் ஒரு மாதம் வழங்க வேண்டும். அமுக்கராசூரணம் 5 கிராம் பாலுடன் காலை மாலை வழங்க வேண்டும்.

சிறுநீர்ப்பிரித்தி, சிறுநீர்ப் பை

இவற்றில் கற்களால் புண் உண்டாகி அதன் காரணமானால், சிலாசத்து பற்பம் 1 கிராம், முத்து பற்பம் (அ) முத்துச்சிற்பி பற்பம் 1/2 கிராம், பலகரை பற்பம் 1/2 கிராம் இவைகளை ஒன்றாகக் கலந்து பசு வெண்ணையில் கலந்து காலை, மாலை என தொடர்ந்து வழங்க வேண்டும். வாழைத்தண்டு சாறு, முள்ளங்கி சாறு 100 மி.லி. வீதமும், தேற்றான்கொட்டை இளகம் 1/2 தேக்கரண்டி இவைகளை தொடர்ந்து காலை மாலை வழங்க வேண்டும்.

சிறுநீர்ப் பிரித்தி, சிறுநீர்ப் பை

இவற்றின் அழற்சியானால் சூத செந்தூரம் ஒரு அரிசி எடை தேனில் காலை மாலை என தொடர்ந்து வழங்க வேண்டும். கந்தக பற்பம் 1 அரிசி எடை, சிலாசத்து பற்பம், சங்கு பற்பம் தலா 1/2 கிராம் மூன்றையும் ஒன்றாகக் கலந்து பசு வெண்ணை அல்லது பசும் பால் இவற்றுடன் தொடர்ந்து வழங்க வேண்டும்.

சிறுநீர்ப் பிரித்தியில் காச நோய் ஏற்பட்டு அதனால் மூத்திரத்தில் சீழ் உண்டானால், சூதசெந்தூரம், அல்லது தாளகபற்பம் ஒரு அரிசி எடை, திப்பிலி ரசாயனம் 1/2 தேக்கரண்டியுடன் சேர்த்து காலை மாலை தொடர்ந்து வழங்க வேண்டும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

6 <u>பால் போன்ற மூத்திரம்</u>

யானைக்கால் கொசுத் தீண்டி அதனால் ஆனைக்கால் நோய் ஏற்பட்டு விடுமேயானால் சிறுநீர் சில நேரம் பால் போல் வரும்.

<u>சிகிச்சை</u>

சூதசெந்தூரம் 1 அரிசி எடை காலை மாலை தேனுடன் தொடர்ந்து வழங்க வேண்டும். மஹாவல்லாதி லேகியம் 1/2 தேக்கரண்டி காலை மாலை வழங்க வேண்டும்.

மூத்திரக் கற்கள் இசிவு (RENALCOLIC)

யாதோர் தொல்லையுமின்றி மூத்திரத்தோடு வெகு சிறு கற்கள் வெளியாகலாம். சில சமயங்களில் எரிச்சல் மட்டும் நீர் இறங்கும் போது உண்டாகலாம். சில சமயங்களில் இந்த மணற் கற்கள் பெருங்கற்களாக மாறிச் சிறுநீர்ப் பிரித்தியை விட்டு மூத்திரக்குழாயில் இறங்கலாம். அப்போது பொறுக்க முடியாத வலியை உண்டாக்கும். அதற்கு சிறுநீர்ப் பிரித்தி இசிவு என்று பெயர். இந்தக் கற்கள் யூரிக் அமிலம், யூரேட்ஸ், ஆக்ஸலேட்ஸ் இவற்றால் ஆனவை. பாஸ்பாடிக் (PHOSPHATIC) கற்கள் நீர்ப்பையில் உண்டாகும். மூத்திரத்தில் புளிக்காடி சத்து (ACIDITY) அதிகம் இருந்தால் யூரிக் ஆசிட் கற்கள் உண்டாகலாம். காரச்சத்து (ALKALINITY) அதிகமாக இருந்தால் ஆக்ஸலேட் கற்கள் உண்டாகலாம். மூத்திரக் குழாயில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் கற்கள் கீழே மூத்திரப்பைக்குள் வர முயலும் போது வலி உண்டாகிறது.

குறிகள்

இடுப்பிலும், நடு முதுகிலும், பொறுக்க முடியாத வலி உண்டாகும். உடலை ஆட்டினாலும், நகர்ந்தாலும், நடந்தாலும் வலி அதிகரிக்கும். எந்த சிறுநீர்ப் பிரித்தியில் இந்த அடைப்பு ஏற்படுகிறதோ அந்த இடத்தில் முதுகில் தொட்டால் வலி அதிகரிக்கும். சில சமயம் சிறுநீர்ப் பிரித்தியில் அழற்சியும் ஏற்படும். வலி விட்டு விட்டு வரும். கடைசியில் மூத்திரப்பையில் கல் இறங்கிவிட்டால் வலி நின்று விடும்.

நோயாளியின் முகம் வெளுத்து, கை நாடி பலம் குறைந்து, வேர்வை உண்டாகி, மூச்சு அடிக்கடி விட வேண்டி வரும். காய்ச்சலும் குளிரும் ஏற்படும். குமட்டலும் வாந்தியும் உண்டாகும். வலியின் கடுமை கற்களின் கனத்தைப் பொறுத்திருக்கும். மூத்திரத்தில் இரத்தம் கலந்து வெளியாகும். 15 அங்குல நீளமுள்ள மூத்திரக் குழாய் வழியாக இது கீழே இறங்காமல் திரும்பவும் சிறுநீர்ப் பிரித்திக்குத் திரும்பி ஏறிவிட்டாலும் விடலாம். அங்கே தங்கி புண் உண்டானால், ரத்தமும், சீழும், வெண் கருவும் மூத்திரத்தில் காணப்படும்.

சிகிச்சை இரண்டு விதம்

1. வலியை உடனே நிறுத்திக் கற்கள் மூத்திரக் குழாயின் வழியாக சீக்கிரம் கீழே இறங்கச் செய்வது.

2. வலி இல்லாத வேளைகளில் கற்கள் உண்டாகாமல் தடுக்கும் முறைகளை கையாளுவது.

<u>வலியை நிறுத்த</u>

ஒரு குன்றி அளவு அபின் கொடுக்க வேண்டும் கால்படி சுடுநீரில் 60 நெல்லெடை சோடா உப்பைக் கலந்து வலி இருக்கும்போதும் அதன் பிறகும் குடிக்கக் கொடுக்க வேண்டும். ஒரு தொட்டியில் சுடு தண்ணீர் வைத்து அதில் நோயாளியை இடுப்பு முழுவதும் நடு முதுகு வரையில் அமிழ்ந்திருக்கும்படி 10 மணித்துளி நேரம் உட்கார வைக்க வேண்டும். சுடு தண்ணீர் வைத்து குடல் கழுவி மூலம் எனிமா கொடுக்க வேண்டும்.

வலி இல்லாத வேளைகளில் காய், கறி, பழம் இவைகளை உணவுடன் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். உண்ணும் உணவை ஒரு நாளைக்கு நான்கு வேளையாகப் பிரித்து உண்ண வேண்டும். தண்ணீர் அதிகம் குடிக்க வேண்டும். உடலில் நல்லெண்ணைத் தேய்த்து வெயிலில் உடலைக் காயவைக்க வேண்டும்.

மருந்துகள் முன் கூறியது போல் கொடுக்க வேண்டும்.

<u>சிறுநீர்ப் பிரித்தி அழற்சி காரணங்கள்</u>:

1. திடீரென்று திறந்த உடலில் குளிர் காற்றுப் படுவதால் வாடைப்பட்டு அழற்சி உண்டாதல்.
2. தாங்க முடியாத உடல் உழைப்பு.
3. நுண்ணங்களால் ஏற்படும் பாடாணம்.
4. மலேரியா குளிர்க் காய்ச்சல்.
5. மேக வியாதி
6. கள், சாராயம் அதிகம் குடித்தல்.
7. வெப்பமும், காரமுமான மருந்துகள்.

<u>குறிகள்</u>

குளிர் காய்ச்சல், இடுப்பில் வலி, வாந்தி,

தலைவலி, மலச்சிக்கல், நாக்கில் அழுக்கு, காய்ச்சல் 100, 103 டிகிரி வரையில், சில சமயங்களில் காலிலும் வயிற்றிலும் சுரப்பு, மூத்திரம் குறைவுபட்டு வெண் கருவுள்ளதாக இருக்கும். இரத்தக் கலப்பினால் மூத்திரம் கருஞ்சிவப்பாக இருக்கலாம். பூதக் கண்ணாடியால் பரிசோதித்தால் சிறுநீர்ப் பிரித்திகளின் இழையமும் (RENAL TISSUES), குருதியணுக்களும் (BLOOD CELLS) காணப்படும். முகம் வெளுத்தல், கண்ணிமை தடித்தல், உடல் தடித்தல் இவையனைத்தும் உண்டாகலாம். இது சாதாரண அழற்சியானால் சீக்கிரத்தில் குணமாகும். இல்லாவிட்டால் நோய் கடுமை அதிகமாகி சிகிச்சையும் நீண்ட நாட்களுக்கு அளிக்க வேண்டி வரும்.

சிகிச்சை

நோயுற்ற அவயங்களுக்கு ஒய்வு கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட ஓய்வை உணவின் மூலம் கொடுக்கலாம். புளி, காரம் இவைகளை தள்ளிவிட வேண்டும். பால் உயர்ந்த உணவு, சிறிது சிறிதாக அடிக்கடி குடிக்க வேண்டும். ஒரு நாளைக்கு 1 1/2 படி பால் போதுமானது. இது தவிர அதே அளவு தண்ணீரும் குடிக்க வேண்டும். தண்ணீர் அதிகம் குடித்தால் இரத்தத்தில் உள்ள பாடாணத்தன்மையின் வேகத்தை குறைக்கவும், அதை வெளிப்படுத்தவும் இதுவே போதுமானது. பால் சீரணிக்க முடியாமல் போனால் மோரும், பார்லி தண்ணீரும் கலந்து குடிக்க வேண்டும். முதுகில் சிறுநீர்ப் பிரித்தி இருக்குமிடத்தில் கடுகு பற்று, சூடான ஆளிவிதை மாவுக்களி இவற்றில் ஒன்றை போட வேண்டும். உடலை நன்றாகத் துடைத்துவிட்டு பிறகு வெந்நீரில் குளிக்கச் செய்ய வேண்டும். வேர்வை நன்றாக வரும். கடுக்காய் குடிநீர் வைத்து குடிக்கச் செய்து மலமிளக்கி போக்க வேண்டும். உள்ளிப்பூண்டு சாறு தினம் 10 மி.லி. காலை மாலை தர வேண்டும். இதயம் பலவீனப்பட்டால் வெள்ளை மருதுப்பட்டை சூரணம் தினம் காலை மாலை ஒரு தேக்கரண்டி வழங்க வேண்டும். மூத்திரமே வராமல் நின்று விட்டால் வாய் வழியாக உணவு வழங்கக் கூடாது. இந்த நிலை ஏற்பட்டு நீர் வெளியேறாவிட்டால் உடல் சுரந்து மகோதரம் எனும் நீர் தேக்க நோயாக மாறும். இந்நிலையில் கம்பளிப் போர்வையை சுடு தண்ணீரில் நனைத்துப் பிழிந்து 1/2 மணி நேரம் உடல் முழுவதும் போர்த்தினால் வேர்வை உண்டாகி நீர் சுரப்பு குறையும். மருந்து சூத செந்தூரம் 1 அரிசி எடை காலை மாலை தேனில் கலந்து தர வேண்டும் அல்லது லோகமண்டூரம் 2 அரிசி எடை காலை மாலை இலந்தைப் பழ ரசத்துடன் கொடுக்க வேண்டும்.

மூத்திரப் பை அழற்சி

இது தொற்று நச்சுக்களால் உண்டாகிறது. வெள்ளை, வெட்டை நுண்ணங்களாலும் கோலன் நுண்ணங்களாலும் உண்டாகிறது. மேலே இருக்கும் சிறுநீர்ப் பிரித்தியிலும், கீழே இருக்கும் மூத்திர புறவழியிலும் உண்டாகும் நோய் கிருமிகளால் தொற்று ஏற்படுகிறது.

குறிகள்

மூத்திரப் பையில் வலி, அடிக்கடி நீர் இறங்குதல், நீர் இறங்கும்போது சுருக்கென்று குத்திவலி உண்டாதல், காய்ச்சல் அடித்தல், மூத்திரம் புளிக்காடி அதிகரித்து கலங்கி, சீழ், சளி, இரத்தம் இவை கலந்து வெளியாதல்.

சிகிச்சை

தண்ணீர் தாராளமாகக் குடிக்க வேண்டும். பார்லி கஞ்சி குடிக்க வேண்டும். வலி அதிகமிருந்தால் அபின் ஒரு குன்றி எடை கொடுக்க வேண்டும். எனிமா கொடுத்து குடலை கழுவ வேண்டும். பிறகு அரிசிமாக் கஞ்சியில் சிறிது அபின் கலந்து எனிமா கொடுத்தால் வலி குறையும். பால், கஞ்சி, பழரசம் இவைகளை ஆகாரமாகக் கொள்ள வேண்டும். முள்ளங்கிச் சாறு, வாழைக்கட்டைச் சாறு, அயக்காந்த செந்தூரம் 1 அரிசி எடை தேனில் காலை மாலை கொடுக்க வேண்டும்.

மேற்கூறிய அனைத்து நோய் கண்டவர்களும் புலால் உணவை அறவே நீக்க வேண்டும். புகைப் பிடித்தல், மது அருந்துதல், புகையிலையை வெற்றிலையோடோ அல்லது வேறு வகையிலோ உபயோகிக்கக் கூடாது. தாவர உணவைத்தான் உண்ண வேண்டும். புளி, காரம் கூடாது. ஆண், பெண் உடலுறவு கொள்ளுதல் கூடாது.

மேற்கூறிய வகைகளில் மேற்கண்ட அனைத்து நோய்களுக்கும் சிகிச்சை அளித்து குணமளிக்க சித்த மருத்துவம் நமக்கு வழிகாட்டியுள்ளது. இவையனைத்தும் அனுபவத்தில் கண்டவை. நவீன மருத்துவர்களின் உதவியால் உடலில் உள்ள மேற்கூறிய அவயங்களை பார்த்து அறிந்தவைகளாகும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

பஞ்ச பாடாணம் - மருந்துகளின் செய்முறை சுவடிக் குறிப்புகள்

டாக்டர். பா.ஈஸ்வரமூர்த்தி பி.எஸ்.எம்.எஸ்.
அகஸ்தியர் சித்த குருகுலம், திருவண்ணாமலை

சித்தர்களின் சிந்தனை தெளிவிலே வளர்ந்தது சித்த மருத்துவம். 'கல்தோன்றி மண்தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழ்' என்பது சித்தர்கள் நெறியால் மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கலி யுகத்தில் 1,800-ம் ஆண்டுகளில் இருந்த பல்வேறு துறைகளைப் பற்றிய அரிய குறிப்புகள் குற்றாலத்தின் குன்றுகளில் கிடைக்கப்பெற்றுள்ளன. அன்றைய மெய்ஞான விஞ்ஞான வல்லுனர்களான சித்தர்களின் கருத்துகள் பாடல்களின் வடிவிலே செவி வழியாகச் சொல்லப்பட்டு, பின் ஏட்டுச் சுவடிகளுள் ஏற்றம் பெற்று, இன்றும் அச்சேறாமல் இருக்கும் அரிய சுவடிகள் "கந்தர் நாடிவாக்கியம்-பிரபஞ்ச காண்டம்:. உலக தீர்க்க தரிசனம்" என்ற தலைப்பின் கீழ் கிடைத்துள்ளது, அச்சுவடிகளில் மருத்துவ காண்டத்தில் சொல்லிய கருத்துக்கள் வேறு எந்த சித்த மருத்துவ நூல்களிலும் கிடைக்கப் பெறாமையால் இங்கு தொகுத்துக் கூறப்பட்டுள்ளது.

தமிழுக்கு முதல்வனாய் நின்ற முருகப்பெருமானின் வழியில் அகஸ்தியர் மற்ற சித்தர் பெருமக்களின் உதவியோடு தென்காசிக்கருகில் "தோரணகிரி" எனும் இடத்தில் மருத்துவக் கல்விக்கூடம் ஒன்றை நிறுவி அதில் தத்துவம், மருத்துவம் யோகம் போன்றவற்றை மாணவர்களுக்குக் கற்பித்து வந்தனர். மாணவர்கள் பயிற்சிக் கூடத்தில் பன்னிரெண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்ற பின்னரே மற்ற பகுதிகளுக்கு மருத்துவம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். பயிற்சிக் காலத்தில் இருந்த கல்வித்திட்டங்கள், போதனா முறைகள் சுவடிகளில் விரிவாக காணக்கிடைக்கிறது.

முதல் ஆறு ஆண்டுகள் மாணவர்கள் "மறை நூலில்" கூறிய பயிற்சிகளையும், பின் ஆறு ஆண்டுகள் பிறை நூலில் கூறிய பயிற்சிகளையும் மேற்கொண்டதாக கூறப்படுகின்றது. மறை நூலில் கல்வித் திட்டங்களாக வேதாந்தம், நோயில்லா நெறி, மருந்து மூலப் பொருட்கள், பாடாணம், லோகங்களை மருந்துகளாக்கும் முறை (சரிகை, கிரிகை, வாகடச்சீர்) பஞ்ச பூத அடிப்படையில் மருந்துகளை ஐக்கியப்படுத்துதல், இரண வைத்தியம், தாவர சத்துவம் என்பவை அடங்கும். பின் ஆறு ஆண்டுகளின் பிறை நூலின் கல்வித் திட்டங்களாக தத்துவம், இலவணங்கள், முப்பு அமுரி, கற்பம், மெய்ப்பொருள் காணும் நிலைபற்றிய அறிவு ஆகியவை அடங்கியிருந்தன.

'மறைநூல்' தொகுப்பில் அடங்கியிருந்த பஞ்சபாடாண மருந்துவகைகள் அவற்றின் சுத்திகரிப்பு, செய்முறையின் போது கவனிக்க வேண்டிய குறிப்புகள் ஆகியவற்றை பெங்களூரில் உள்ள சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தாரால் கடந்த இருபத்தியைந்து ஆண்டுகளாக பயன்படுத்தி நல்ல பலனைப் பெற்று வருகின்றார்கள். சித்த மருத்துவ முறையில் பாடாணம் மற்றும் உலோகங்கள் மூலம் மருந்துகள் செய்யப்படுவதால், அம்மருந்துகளை உபயோகிப்பவர்களின் உடலில் நாள்பட்ட நஞ்சு நிலை (cumulative toxicity) ஏற்படும் என்பது தற்கால (allopathy) மருத்துவ விஞ்ஞானிகளின் கருத்து. இச்சுவடியில் கூறியுள்ள முறைகளை பின்பற்றி சுத்திகரிப்பு, மருந்து செய்முறை, மருந்துகளை தீட்சை செய்தல், மிகக்குறைந்தளவு பாடாண மருந்துகளை உபயோகித்தல் போன்ற குறிப்புகள் மிகவும் பயன்தருபவையாக உள்ளதால் இங்கு இம்முறைகளை ஆராய்வோம்.

மருந்து செய்யும் காலை வீரியத்தை அதிகப்படுத்தவும், மருந்துகளை எளிதில் முடிக்கவும், முப்பு, குரு, ஜெயநீர் என்னும்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

பொருட்களையும் உபயோகித்துள்ளனர். இம்முறைகள் குரு, சிஷ்யர் பரம்பரை வாயிலாகவே மற்றவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன. இம்முறைகளை அறிவியல் நோக்கத்தோடு பரந்த அளவில் பயன்படுத்தி, ஆய்ந்து அறிவதால் சிறந்த மருத்துவ முறைகள் சித்த மருத்துவ உலகிற்கு கிடைக்க வாய்ப்புண்டு.

மருந்து செய்முறைகள்

பஞ்ச பூதங்களே முதலாய்நின்ற இப்புவியில், மருந்துப் பொருட்களும், இவற்றின் ஆளுகைக்கு உட்பட்டதே. பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற பஞ்சமகா பூதங்களுக்கு இடமானதாக முறையே தாளகம், பூரம், வீரம், கௌரி, லிங்கம் என்னும் பாடாணங்களும், மருந்து செய்முறைகளும் கூறப்பட்டுள்ளன. இவை போலவே லோகம், உபரசம் போன்றவற்றிற்கும் முறைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இம்மருந்துகளில் முதலில் செந்தூரமாகவும் பின் அச்செந்தூரத்தையே பற்பமாகவும், பின் அப்பற்பத்தையே கட்டாகவும் செய்தல் என்பது பொதுவாக கடைபிடிக்கப்பட்ட விதியாகும். எல்லாக் கருத்துக்களையும் ஈங்கு கொடுக்க முடியாத படியால் பஞ்ச பாடாணங்களின் முதல் படியான செந்தூரம் செய்முறைகள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளது.

பிருதிவி சரக்கு: தாளகம்

மண் சுரக்காய், கடினத்துவம் கொண்டதாய், பொன்னிறம் பற்றியதாய் நிற்கும பொருளே தாளகம். தாளகத்தை மண் சட்டியிலிட்டு ஆவின்பாலும் அமுரியும் கலந்த கலவையை ஊற்றி சந்திரபுடம் இட்டு பின்னர் சுத்த கங்கையில் கழுவி எடுக்கப்படுகின்றது.

சுத்தித்த தாளகத்தை (செங்கனிச் சாறு) எனும் எலுமிச்சை சாறிட்டு அரைத்து வில்லை செய்து உலர்த்தவும், இவ்விலைக்கு கீழ்காய்நெல்லி, மான்செவி, கள்ளி இலை இரண்டையும அரைத்த விழுதினால் கவசம் கட்டவும், செம்மண்ணும், ஆனைநெருஞ்சி இலையும் அரைத்த விழுதை மண் ஒட்டிற்கு பூசி மடக்கை உலர்த்தவும். இந்த மண் ஒட்டில் வில்லைகளை இட்டு சந்துவாய் சீலை செய்து நிழலில் உலர்த்தவும். மணல் மறைவு புடமிட்டு, ஆறியபின் எடுக்க, தாளகம் செந்தூரமாகி இருக்கும். இச்செந்தூரத்தையே பற்பமாகவும், இப்பற்பத்தையே வீரியமுள்ள கட்டாகவும் செய்யும் முறைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

அப்பு, தேயு சரக்கு: பூரம், வீரம்.

இது ஒன்றிற்கு ஒன்று சொந்தமானதும், சத்ரு, மித்ரு சரக்காகும். அப்பு, தேயுவின் இயல்பைபெற்ற இவற்றை சுத்தி செய்து உபயோகிக்க அமிர்தமாகவும், இல்லையேல் மரணத்திற்கு வழியாகவும் நிற்கும். இதனை

"பச்சையாக சரக்குதன்னால் இச்சா மரணமாச்சு

பாஷாண சரக்குதன்னை சுத்தியாக்க அமிர்தமாச்சு;

சீரான சுத்தி வகைதான் அறியாக்கால்

சிவலோகம் கான நேரான வழியுமாச்சு";

என்று உணர்த்தப்படுகின்றது. பூரம், வீரம் இரண்டிற்கும் சுத்தி முறை பொதுவானது. இவற்றை தனியாகவோ, அன்றி சேர்த்தோ செய்தும் பயன்படுத்தலாம். பூரம், வீரம் இரண்டையும் கள்ளிப்பால், செவ்விளநீர், அமுரி கலந்த கலவையில் ஒரு பீங்கான் பாத்திரத்திலிட்டு ஊறவைக்கவும். ஐந்து நாள் சந்திரபுடத்திலிடவும். சோற்றுப்பு, எலுமிச்சை சாறு(செங்கனிச் சாறு) சேர்த்த நீரில் பூரம், வீரத்தை கழுவி உலர்த்தவும்.

சுத்தித்த பாடாண சரக்கை நிலவேம்பு இலைச்சாறு, பழரசம்(செங்கனி), குப்பைமேனி சாறு ஆகியவை ஒன்று கலந்த கலவையால் கல்வத்திலிட்டு அரைக்கவும். மரக்கரண்டியின் உதவிகொண்டு வில்லைகள் செய்து உலர்த்தவும். வில்லையை நீலக் கண்ணாடியின் கீழ்வைத்து மதிபுடத்தில் 15 நாட்கள் வைக்கவும். செம்மண்ணும், செந்நாயுருவியும் சேர்த்து அரைத்ததை மண் ஓட்டிற்குத் தடவி, மடக்கை உலர்த்தவும். இந்த மண் ஓட்டில் பாடாணத்தை இட்டு சீலைமண் செய்து உலர்ந்தபின் எரிபுடம் கொடுக்கவும். நீலபுகை வரும்வேளை தீயை அணைத்துவிடவும். வீரம், பூரம் செந்தூரமாவதில்லை. பற்பமாகவே பூத்திருக்கும். இப்பற்பத்தையே கட்டுசெய்ய பயன்படுத்துதல் வேண்டும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

வாயு ஆகாய சரக்கு: லிங்கம்.

கௌரி, லிங்கம் முறையே சக்தி, சிவமாய் நிற்கும். இதனை அமுரியில் ஊறவைக்கவும். பொடித்தபின் கல்வத்திலிட்டு பழச்சாறும்(செங்கனி) மான்செவி இலைச்சாறும் கலந்து அரைக்கவும். அரைத்ததை வில்லைகளாக்கி உலர்த்தவும். இதனை மண் ஓடிலிட்டு சீலைமண் செய்து எரிபுடம் இட்டு எரிக்கவும். ஆறியபின் எடுத்துப்பார்க்க செந்தூரம் ஆகும். கௌரி, லிங்கம் பற்பமாவதில்லை. இச்செந்தூரத்தையே கட்டாகச் செய்யலாம்.

இத்தகைய பாடாண மருந்துகளை தனித்தனியாகவோ அன்றி ஒன்று சேர்த்து சண்டமாருத கட்டாகவோ வழங்கலாம்.

மருந்துகளை தீட்சை செய்யும் முறை

இவ்வாறாக செய்யப்பட்ட மருந்துகளை வீரியப்படுத்தும் நோக்குடன் தீட்சை செய்தல் எனும் முறை சிறப்பாக கூறப்படுவது நோக்கத்தக்கது. இதனை பிரணவ தீட்சை என்றும் கூறுவர். அகாரம், உகாரம் இரண்டும் சேர்ந்தே மருந்தாகும். (அகாரம்-எட்டு; உகாரம்-இரண்டு) ஒரு பங்கு மருந்து பொருளாவது நான்கு பங்கு அனுபானத்துடன் சேர்த்து அரைக்கப்படுதலை ஒரு தீட்சை என்பர். இவ்வாறாக பத்துமுறை வரை தீட்சை செய்யலாம்.

சுக்கு, திரிகடுகு, திரிபலா ஆகியவற்றை முறையே வாத, பித்த, கப நோய்களுக்குத் தீட்சை செய்ய பயன்படுத்தலாம். இவைகளுடன் பொதுவான தீட்சைமுறை ஒன்றுண்டு. தாய்ப்பாலைக் காய்ச்சி எலுமிச்சம்பழச் சாறிட்டு முறித்துக் கொள்ளவும். அதனை வடித்த பிறகு எடுத்த நீரினை மீண்டும் காய்ச்சியதும் வரும் உப்பை தீட்சை செய்யப் பயன்படுத்தலாம். இக்காலங்களில் தாய்ப்பால் கிடைப்பது அரிதாகையால், பசும்பாலில் இம்முறையைக் கையாள்வது வழக்கில் உள்ளது. இம்முறையும் நல்ல பலனைப் பெற்றுள்ளது. இத்தகைய தீட்சை செய்யும் போது, மருந்துப் பொருட்கள் வீரியம் பெறுவதுடன் உடலில் சென்றடையும் பாடாண மருந்துகளின் அளவும் குறைகிறது. இந்த ஆராய்ச்சி நிலையத்தாரால் தீட்சை செய்தபின் கொடுக்கப்படும் மருந்துகளில் மூல மருந்துகளின் அளவு 0.25 மி.கி மேல் அதிகப்படுவதில்லை. இம்முறையால் பின்விளைவுகள் ஏதும் இன்றி சிறந்த மருத்துவப் பலனைப் பெறமுடிகிறது. ஆகவே இம்முறையை சிந்தித்து அதன்படி செயலாற்றுவதால் சித்த மருத்துவ உலகம் பயனடைய ஏதுவாகும்.

கிரகங்களின் ஆதிக்கம், சுற்றுப்புற சூழல், அகாரவிகாரங்கள் என்பவையே நோய்களுக்கு ஆதாரமானபடியால், கிரகங்களுக்கு உகந்த பாடாண உலோக பொருட்களை மருந்துகளாக்கி, உடலிற்குத் தேவையான மிகச் சிறிதளவு (traces) உடல் ஏற்றுக்கொள்ளும் வகையில் கொடுக்க வேண்டியது மருத்துவர்கள் கடமை. ஆகவே இவைகளின் நச்சுத் தன்மையயைக் குறைப்பதற்கு மருந்து சுத்திகரிப்பு, முறைதவறாது மருந்துகள் செய்தல், மருந்துகளைத் தீட்சை செய்து உபயோகித்தல், மிகக் குறைந்த அளவு தகுந்த அனுபானத்தோடு - வழங்குதல் என்ற முறைகளைச் சுவடியில் கூறியுள்ளபடி கடைபிடிக்கும் போது நிறைந்த பலனை எதிர்நோக்கலாம்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

வர்மம்

* Dr. T. மோகன் ராஜ், ** Dr. K. சண்முகசுந்தரி ப. அய்பின் ராஜ்
A.T.S.V.S. சித்த மருத்துவக் கல்லூரி,
முஞ்சிறை, புதுக்கடை(P.O), கன்னியாகுமரி மாவட்டம்.

சித்த மருத்துவத்தின் மிகவும் முக்கியமான பகுதிகளில் ஒன்று வர்மம் ஆகும். வர்மஸ்தானம் என்றால் உடலில் உயிர் பரவி நிற்கும் அமைப்பு. இதில் தடை ஏற்படுமாயின் வர்மம் எனப்படும். வாசியேறும் ஸ்தானமெல்லாம் வர்மஸ்தானம். வாசியேற தடைபடுவதால் வர்மமாகும். உடலில் பரவி நிற்கும் உயிரோட்டம் தடை பெறுவதால் வர்மமாகும். வர்மம், உடலில் மறைந்து நிற்கும் சுவிட்சுகள். இதை தட்டுவதால் கண்ணுக்கு தெரியாத காற்றுவேகத்தில் நன்மையும் செய்யும், தீமையும் செய்யும்.

வர்மத்தை வர்மம், காலம், விஷம் என்று மூன்று வகையாக அழைக்கப்படுகிறது.

<u>வர்மம்</u>: தட்டு, முட்டு, அடி, இடி முதலியவற்றால் உட்காயம் ஏற்படுவதால் வர்மம் எனப்படும்.

உடல் உயிர் பரவும் சக்தி ஒர்ந்த ஓர் தாக்கல் தன்னால், பரவிடும் விராவெழுச்சி பற்றியே மிகுதியாகல், உடல் உயிர் நாடி கட்டின் உயர் தொழில் ஒன்றும் பண்ணா, உடல் உயிர் மூச்சின் வேகம் உணர்ந்து ஏறும் இடங்களில் வர்மம்.

<u>காலம்</u>: குறிப்பான இடங்களில் குறிப்பிட்ட அளவு படுவதால் காலம் எனப்படும்.

"கால வேற்றுமைக் கொப்பாய் கஞ்சமுள் ஆலம் போன்று, தோலுடன் இணைந்த நரம்பை, தொடுத்த மாத்திரையின் வன்மையால் சென்று, உடலில் விரைவாய் தாவி உயிர் பறிக்கும் இயல்பை காலமென்றார்."

<u>விஷம்</u>: குறிப்பிட்ட இடங்களில், குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட அளவு படுவதால் விஷம் எனப்படும்.

"விரவும் சென்னிரில் நிலவும் அமுதம் தனைதாக்கி, விரைந்தே இடம்பெறும் செய்கைதான் விஷம் என உரைத்தார் என் முனிவர்."

<u>மர்மம்</u>: வர்மம் உடலில் மறைவான இடத்தில் ஒழிந்திருப்பதால் மர்மம் என்றழைக்கப்படுகிறது.

<u>வர்மத்தின் பிறப்பு</u>:

"கெள்ளவே அலைகடலில் யுத்தத்தில் தானே, ஆதியிலே பிரமனும், சிவனும், விஷ்ணுவும் அலைகடலில் யுத்தமது அறியச் சொன்னார். சொன்னாலே யுத்தத்தில் தெய்வமென்றார், சுருக்கமாக சிவன் சொன்னார், நானே தெய்வமென்று, அயன் சொன்னார் அவரே தெய்வமென்று மாயன் (விஷ்ணு) சொன்னார் நானே ஆகுமென்று, வந்திருந்த மூபேரும் யுத்தமாச்சு, ஆச்சென்ற வாதத்தில் சிவனேயாச்சு, அதிய பித்தம் விஷ்ணுவென்று அறிந்து கொள்ளே. பேச்சென்ற சிலேர்பனத்தில் அடனுமாச்சு. பொதிதாக மூபேரும் யுத்தத்தாலே, வர்மம் என்றார் சிவன் அங்கே மனசில் வைத்தார், வர்மமென்று மயங்கியங்கே இருந்திட்டாரே. இளக்கிவிட்டார் பிரம்மாவும் கையால் தானே, தடவுமுறைகள் தொட்டதெல்லாம் அடங்கலாச்சு. கண்டிருந்த வாரமது சனியே வாரம் போக்குடனே நட்சத்திரம் திருவாதிரையாச்சு, புகழ்பெறவே வர்மமது பிறந்திட்டுதே. கண்டிருந்த சரஸ்வதியும் ஒதிச்சொன்னார் கருவான பொதிகைமலை அகஸ்தீசனாருக்கு, ஒதிச்சொன்ன நூல்தனையும் உரைத்தார். முன்னே உற்றதொரு தட்டுமுறை அதனால் ஆச்சே."

<u>வர்மத்தின் குணம்</u>:

தானாக வர்மத்தின் குணமேதென்றால்
சார்ந்த நரம்பதில் இரத்தம் வற்றி சூடாய்
உனான கெளுத்துடனே வாயுமீறி
உருநரம்பில் நீரேற்றி வாதமாகி
கோனான அனலெழுந்து அமிர்தம் பொங்கி
கொழுத்தபெரும் மசக்கையோடு நரம்புக்கெட்டு
ஏனான இழுப்புவலி நடுக்கம் விக்கல்
இருகாலும் கையோடு உளைச்சல் குத்தே
குத்தோடு இருமல்சயம் அசதிசோம்பல்

* President, A.T. S. V.S. College, Munchira, K.K.Dt, ** Leturer A.T.S.V.S College, Munchira, K.K.Dt

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

குதித்த ஜன்னியே இளைப்பு குளிரும் காய்ச்சல்
இத்தோடு சிரசுநோய் மண்டைகுத்து
இருவிழியும் வெட்டையாகும் மயக்கம் மந்தம்
அத்தோடு அறிவுகெட்டு தாதுகுன்றி
ஆயிழைமேல் இச்சைகெட்டு பெலனும் குன்றி
பத்தோடு தசநாடி கருவி மற்றும்
பலங்குறையும் தொடுகால குணமிதாமே
குணமான ஊன்குறைவு, நாக்குளறல்
கொழுத்த உடல்தான் கறுத்து விளறிகெட்டு
நிணமான ஊனதுவும் உருகிவாடி
நெடுமூச்சு வலி இழுப்பு வறச்சையோடு
ரெணமோடு விரணதலம் ரெக்தமும் கட்டி
நிலைதளர்ந்து கொழுத்துகுத்து உளைவுமாகி
கிணமதிலே பூதமொடு நல்சீவன் கெட்டு
திடங்கெட்டு மரிப்பதும் திண்ணந்தானே.

<u>வர்மம் கொள்ளும் விதம்</u>

"திண்ணமுடன் ஈடதுதான் கொள்ளும் மார்க்கம்
செப்புகிறேன் அடியிடிகள் கொள்வதாலும்
வண்ணமுடன் கைசரசம் செய்வதாலும்
வழிதெரியா திடுக்குகளில் கால்வைத்து விழுதலாலும்
எண்ணமுடன் முன்பின்னால் சாடலாலும்
இதமறியா மோதி விழுந்தொடிதலாலும்
விதமாக ஒடலோடு சாடலாலும்
மெய்கெட்டு தடுமாறி விழுதலாலும்
மதமான மங்கையரை புணர்தலாலும்
ஆத்திர போகத்தாலும்
பரிகரியிலேறி விழுந்தொடிதலாலும்
அதமான விக்கல் வந்து உமட்டிட்டாலும்
அயர்வோடு தலைசுமடு எடுத்தாலும்
சிலம்படி வீச்சுகுத்து குறிப்பதிகம் மீறில் வர்மம்
கொள்ளும்."

<u>பெண்களுக்கு வர்மம் கொள்ளும் விதம்</u>:

"விள்ளவே குனிந்து குடம் தண்ணீரை
விம்மியே விரைவாக உன்னியே எடுத்தாலும்
அள்ளவே தன் பெலனுக்கதிமான
ஆணழகன் தன்னை மருவியே அணைத்தாலும்
கிள்ளவே இடையது தான் பிரளலாலும்
கேடுவரும் கெடுந்தூலம் குலைவதாமே
குலையுமே கொட்டாவி விடுதலாலும்
கொள்ளுவது கடுநடை ஒட்டத்தாலும்
அலையுமே மூச்சுவிடா நீந்தலாலும்
அணைத்து பிடிமுறையும் அடி கொள்ளலாலும்
கலையுமந்த தசவாயு பேதமாகி
கர்பஸ்திரி பிரசவத்தில் முக்கலாலும்
துலையுமே சிசுக்கள் பெற விம்மினாலும்
சுழன்று பைமாறினாலும் வர்மம் கொள்ளும்."

உடலில் அமைந்துள்ள முக்கியமான வர்மங்களை 108 ஆக வகுத்தார்கள். அவை மூன்று விதமாக பிரிக்கப்படுகிறது.

முதல் பிரிவு

படுவர்மம்	12
தொடுவர்மம்	96
மொத்தம்	108

இரண்டாம் பிரிவு

தலையிலுள்ள வர்மங்கள்	25
கழுத்து முதல் நாபி வரை	45
நாபி முதல் மூலம் வரை	9
கையில்	14
காலில்	15
மொத்தம்	108

மூன்றாம் பிரிவு

வாதவர்மம்	64
பித்தவர்மம்	26
சிலேத்தும வர்மம்	6
உள்ளு வர்மம் (படு வர்மம்)	12
மொத்தம்	108

<u>108 வர்மங்களின் பெயர்</u>:

I. <u>**தலையிலுள்ள வர்மங்கள் 25**</u>:

1. திலர்த காலம் 2. நட்சத்திரக் காலம் 3. மூக்கடக்கி வர்மம் 4. காதுகுற்றி வர்மம் 5. உறக்க காலம் 6. ஒட்டு வர்மம் 7. சென்னி வர்மம் 8. கொம்புகுற்றி காலம் 9. மந்திர காலம் 10. தலைப்பாகை வர்மம் 11. நெற்றிபொட்டு வர்மம் 12. கண்ணாடி காலம் 13. பொய்கை காலம் 14. பால வர்மம் 15. நாசிக் காலம் 16. கொக்கி வர்மம் 17. செமை வர்மம் 18. கொண்டால் கொல்லி 19. காதடக்கி காலம் 20. செவிக்குற்றி காலம் 21. பிடரிக்காலம் 22. கொண்டை வர்மம் 23. கோணசன்னி வர்மம் 24. அலவாடி வர்மம் 25. சுழியாடி வர்மம்.

II. <u>**கழுத்து முதல் நாபி வரை உள்ள வர்மங்கள் 45**</u>:

1. பூணூல் வர்மம் 2. குற்றி வர்மம் 3. சிப்பி வர்மம் 4. அரங்கு வர்மம் 5. விலாவடையான் காலம் 6. எட்டெல் வர்மம் 7. மேல் முடிச்சி வர்மம் 8. சங்குதிரி காலம் 9. கிளிமேக வர்மம்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

10. கிளிபிற வர்மம் 11. பின்னூல் வர்மம் 12. வில்லு வர்மம் 13. வாசி வர்மம் 14. வாயு காலம் 15. நட்டெல்லு வர்மம் 16. விலங்கு வர்மம் 17. காக்கட்டை காலம் 18. புஜ வர்மம் 19. சுழுக்கு வர்மம் 20. தூசி வர்மம் 21. நெஞ்சில் திலர்தகாலம் 22. காரீரல் வர்மம் 23. அடப்பகாலம் 24. வலமேந்தி காலம் 25. முண்டெல்லு வர்மம் 26. விலிய அத்தி சுருக்கி காலம் 27. சிறிய அத்தி சுருக்கி காலம் 28. முன் சுருதிவர்மம் 29. குழியான் வர்மம் 30. கதிர் வர்மம் 31. கதிர்காம வர்மம் 32. சக்தி வர்மம் 33. அஷ்ட வர்மம் 34. திவளை காலம் 35. கூம்பு வர்மம் 36. நேர்வர்மம் 37. அனுமார் வர்மம் 38. மாற்றான் காலம் 39. நெஞ்சடையான் காலம் 40. வெள்ளீரல் வர்மம் 41. சுருக்கி வர்மம் 42. உறுமி வர்மம் 43. பள்ளை வர்மம் 44. கச்சை வர்மம் 45. ஆதி வர்மம்.

III. நாபி முதல் மூலம் வரையுள்ள வர்மங்கள்-9:

1. வலம்பிரி காலம் 2. வெல்லுறுமி காலம் 3. மூத்திரக்காலம் 4. இடம்பிரி காலம் 5. வல்லுறுமி காலம் 6. தண்டுவர்மம் (யோனி வர்மம்) 7. கல்லடைக் காலம் 8. பொருத்து வர்மம் 9. நாயிருப்பு காலம்.

IV கையிலுள்ள வர்மங்கள்-14:

1. ஜன்னி வர்மம் 2. கைமடக்குகுழி வர்மம் 3. சுருக்கு வர்மம் 4. விஷபந்த வர்மம் 5. மணிபந்த வர்மம் 6. தெட்சணை காலம் 7. கோச்சு வர்மம் 8. கைமத்திய வர்மம் 9. கைமூட்டு வர்மம் 10. மணிகட்டு வர்மம் 11. துதிக்கை வர்மம் 12. தட்சிணை எடுக்கும் வர்மம் 14. கையில் கவளி வர்மம் 14. சிறுவிரல் கவளி வர்மம்

V காலிலுள்ள வர்மங்கள்- 15:

1. ஆமைக்காலம் 2. முட்டில் சிரட்டை வர்மம் 3. முழங்கால் வர்மம் 4. சிறுவிரல் கவளி வர்மம் 5. பூமி காலம் 6. சீப்பு வர்மம் 7. பதைகால் வர்மம் 8. சுருக்கு வர்மம் 9. பெருநரம்பு வர்மம் 10. மண்ணை வர்மம் 11. குதிகால் வர்மம் 12. உப்புகுத்தி வர்மம் 13. கரண்டை வர்மம் 14. கவளி வர்மம் 15. உள்ளங்கால் வர்மம்

இந்த 108 வர்மங்களில் ஒற்றையாக வருபவற்றை ஒற்றை வர்மம் என்றும் இரண்டாக வருபவற்றை இரட்டை வர்மம் என்றும் கூறப்படுகிறது.

தட்டு வர்மம் 8:

